8. அரசினர் தீர்மானம்

விதி 33-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்''.

(முற்பகல் 10-50)

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 33ஆவது விதியைத் தளர்த்தி அரசு அலுவல்களுக்கான நிகழ்ச்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள், ஆனால் அதே விதியின்படி இவ்வாறு எந்த வியாழக்கிழமையேனும் அரசு அலுவல்களுக்கென எடுத்துக்கொள்ளப் பெறுமானால் அதற்குப் பதிலாக அதே வாரத்தில் அல்லது அடுத்த வாரத்தில் வேறொரு நாளை தனி உறுப்பினர் அலுவல்களுக்காகப் பேரவைத் தலைவர் ஒதுக்கலாம் என்று இருக்கிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டம் ஏற்கெனவே ஆளுநர் உரையை ஒட்டி 11 தினங்களும் இப்போது கிட்டத்தட்ட 30 தினங்களுக்கு மேலும் நடைபெற்றும் கூட தனி உறுப்பினர் அலுவல்களுக்காக எந்த நாளும் ஒதுக்கப் படவில்லை. நாளைய தினமாவது தனி உறுப்பினர் அலுவல்களுக்காக எடுத்துக்கொள்ளப்படுமா, தனி உறுப்பினர்கள் பலர் தனித் தீர்மானங்கள், பல முக்கியமான தீர்மானங்கள் கொடுத்திருக்கும்போது அதைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதோடு கூட இந்த நிகழ்ச்சி நிரல்படி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்து அதையே அறிவிப்பாகச் சொல்வது என்ற நடைமுறை சரியானதுதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன். காரணம் அலுவல் ஆய்வுக்குழு கால அட்டவணையை நிர்ணயம் செய்யலாம். விதிகளைத் தளர்த்தி வினா நேரத்தை எடுத்துக் கொள்வதோ அல்லது இதுபோன்ற தனி உறுப்பினர் அலுவல்களுக்கான நேரத்தை எடுத்துக் கொள்வதோ முதலிலே நிகழ்ச்சி நிரல் அறிவிப்பாக வந்த பிறகு, இங்கே தீர்மானம் வருவது என்பதோ இந்த அவையை டேக்கிங் பார் கிரான்ட்டட் என்பது போன்று இருக்கிறது. அது முறையானது அல்ல. இந்த முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிற நேரத்திலே தனி உறுப்பினர் அலுவல்களுக்காக

இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு நாளையேனும் ஒதுக்க வேண்டும். பல முக்கியமான தீர்மானங்களை நாங்களும் மற்ற கட்சியைச் சார்ந்தவர்களும் கொடுத்திருக்கிற காரணத்தாலே அதற்கென்று நாளையேனும் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய உரிமையையும் பெருமையையும் காப்பாற்றுவதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழுவே இருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழு என்பது அவையினுடைய உரிமைகளை மீறிச் செயல்படுவதற்காக அமைக்கப்பட்டது அல்ல. அவையினுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்கான அனைத்துக் கட்சித் தலைவர்களும் இடம் பெற்ற அலுவல் ஆய்வுக்குழு அவையிலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பணிகளை, பல்வேறு தீர்மானங்களை எந்த முறையிலே முன் உரிமை கொடுத்து அவற்றை நிறை வேற்றுவது என்பதை ஆலோசிக்கிற வாய்ப்புப் பெற்றிருக்கிற காரணத்தால் கால கட்டத்தில் தனியாருடைய அலுவல் என்று நியமிக்கப்பட்ட இந்த நாள் மாற்றி அமைக்கப்படுகிறதே தவிர, தனியார் அலுவல் என்பது புறக்கணிக்கப் பட்டதாகக் கருதப்படக் கூடாது. மற்றும் நிதிநிலை அறிக்கையை ஒட்டி பல்வேறு விதமான மானியங்களிலே விவாதம் நடைபெறுகிறபோது பெரும்பாலான மாண்புமிகு உறுப்பினர்களுடைய பல்வேறு விதமான எண்ணங்கள் பூர்த்தி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், விவாதிக்கப் படக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், தனி நபர் அலுவல் என்ற முறையில் வருகிற நாளை பெரும்பாலும் பல் வேறு சட்டமன்றத் தொடர்களில் பல்வேறு ஆண்டுகளில் இந்தக் காலக்கட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. எனவே இதற்கு மேல் தனியார் அலுவல்களுக்காக நாள் வேண்டு மென்று சொன்னால், அரசாங்க மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டதற்குப் பிறகு மேலும் நீட்டிக்கக்கூடிய வாய்ப்பு இருந்து பெரும்பான்மை அங்கத்தினர்களுக்கும் இசைவாக இருக்கு மானால் அதுவும் அலுவல் ஆய்வுக் குழுவிலேதான் கலந்து ஆலோசிக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய திரு. வரதராசன் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்சினை, பேரவை முன்னவர் அவர்களுடைய விளக்கம் இரண்டையும் மனத்திலே கொண்டு அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டு முறையாக அதற்கு என்னுடைய தீர்ப்பை அளிப்பேன்.

1989 மே 11] [பேரவைத் தலைவர்]

அடுத்து, பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

9. சட்ட முன்வடிவுகள்

(அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிலச் சீர்திருத்தங்கள் [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள்: [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''